# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | முகவுரை | 1-19 |
| 2 | கருவூலக் கணக்குத் துறை | 20-33 |
| 3 | உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை | 34-59 |
| 4 | கூட்டுறவு தணிக்கை துறை | 60-69 |
| 5 | சிறு சேமிப்புத் துறை | 70-80 |
| 6 | அரசு தகவல் தொகுப்பு விவர மையம் | 81-90 |
| 7 | அரசுத் துறை - நிறுவனத் தணிக்கைத் துறை | 91-98 |

# கொள்கை விளக்கக் குறிப்பு
# மானியக் கோரிக்கை எண்.16

# நிதித் துறை

## 2019-2020 ஆம் ஆண்டிற்கான
## கொள்கை விளக்கக் குறிப்பு

**முகவுரை:**

"ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு"

(குறள் **760**)

திறமையான பொது நிதி நிர்வாகம் என்பது, அரசுக்கு சேரவேண்டிய வருவாயை முறையாகத் திரட்டி அத்தகைய நிதி ஆதாரங்களை விரயம் இன்றிப் பயன்படுத்தி, பொதுமக்களின் நலன் பேணி, அடிப்படை வசதிகளைப் பெருக்கி, தரமான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி நாட்டினை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதே ஆகும். அவ்வாறு, நிதி ஆதாரங்களைப் பொதுமக்களின் நலனைக் குறிப்பாக அடித்தட்டு மக்களின் நலனைப்

பேணுவதற்காகச் சிறந்த முறையில் பயன்படுத்தி, பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவித்து தமிழ்நாட்டை சமூகப் பொருளாதார வளர்ச்சி பெற்ற, வளமான மாநிலமாக உருவாக்கும் பணிக்கு, இந்த அரசு முன்னுரிமை கொடுத்து வருகிறது.

**2.** அரசு செயல்படுத்தும் திட்டங்களுக்கும், அறிவிக்கும் வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களுக்கும் போதிய நிதியொதுக்கம் செய்யப்படுவதை நிதித்துறை உறுதி செய்கிறது. திறமையான நிதி மேலாண்மையின் மூலம், அரசின் சேவைகள் மற்றும் திட்டங்களின் பயன்கள் தொய்வின்றி மக்களுக்கு முறையாகச் சென்றடைவதையும், அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுவதையும் உறுதிசெய்து மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் இத்துறை வழிவகுத்து வருகிறது. நிதித்துறையின் முக்கிய பணிகள்:

1) இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 202 இன்படி சட்டமன்றப் பேரவையின் முன் வைப்பதற்கு ஒவ்வொரு ஆண்டும் அரசின் வரவினங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

2) மாநிலத்தின் கருவூலக் காப்பாளர் என்ற முறையில் தமிழக அரசின் பொது நிதியை மேலாண்மை செய்தல்.

3) மாநில அரசின் நிதி நிலை மேலாண்மை தொடர்பான அனைத்து கொள்கை முடிவுகளையும் அரசு எடுக்க உதவுதல் மற்றும் மறுஆய்வு செய்தல்.

4) மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், மக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், அரசின் நிதி நிலை இலக்குகளை எய்தும் பொருட்டும், துறைவாரியான நிதித் தேவை, செலவுக்கேற்ற பயன், ஆகியவற்றின் அடிப்படையில்

வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கம், நிதி நடைமுறைகளுக்கு உட்பட்டு பல்வேறு கருத்துருக்களைக் கூர்ந்தாய்வு செய்து மதிப்பீடு செய்தல்

5) வரவுகளையும், அதற்கேற்றவாறு செலவுகளையும் சீராகப் பராமரிக்கும் பொறுப்புடன், கடன் பொறுப்புகளையும் அரசின் வரவுக்கேற்றவாறு பொருத்தமான செலவினங்களை மேற்கொள்வதும், பெறப்பட்ட கடன்களை உரிய காலத்தில் திரும்பச் செலுத்துவதை உறுதிசெய்வதும் இத்துறையின் பொறுப்பாகும்.

**3.** பின்வரும் ஏழு துறைகள் நிதித்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ளன:-

(i) கருவூலக் கணக்குத் துறை

(ii) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

(iii) கூட்டுறவு தணிக்கைத் துறை

(iv) சிறுசேமிப்புத் துறை

(v) அரசு தகவல் தொகுப்பு விவர மையம்

(vi) அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை

(vii) ஓய்வூதிய இயக்ககம்

தொடர் எண் (i) முதல் (vi) வரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரங்கள் இக்கொள்கை விளக்கக் குறிப்பில் இடம்பெற்றுள்ளன. ஓய்வூதிய இயக்ககத்தின் செயல்பாடுகள் பற்றிய விளக்கம், கோரிக்கை எண்.50 “ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகாலப் பயன்களும்” குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம் ஆகிய இரண்டு நிறுவனங்களும் நிதித்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

## நிலையான வளர்ச்சி இலக்குகள்

**4.** கடந்த 2015 செப்டம்பரில், ஐக்கிய நாடுகள் சபையின் பொது சபை, 17 இலக்குகள், 169 குறிக்கோள்கள் மற்றும் 300 உலகளாவிய சுட்டிக்காட்டிகளுடன் கூடிய நிலையான வளர்ச்சி இலக்குகளை 01.01.2016 முதல் ஏற்றுக்கொண்டது. மேற்காணும் நிலையான வளர்ச்சி இலக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை, செயல்திறன் அடிப்படையில் செயற்படுத்துவதற்காக, நிதித்துறை அனைத்து துறைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்கிறது. இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் குறிக்காட்டிகளின் மீதான அரசின் முன்னுரிமை அடிப்படையில் நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. கொள்கைகள் மற்றும் திட்டங்களைச் செயல்படுத்த, மேம்பட்ட பன்னாட்டு வளர்ச்சிக் கூட்டுறவுடனும், பல்வேறு நிதி ஆதாரங்களிலிருந்து குறிப்பிடத்தக்க வகையில் நிதி ஆதாரங்களை திரட்டியும் நிதி ஒதுக்கீடு

செய்யப்படுகிறது. அனைவரும் வங்கிக் காப்பீடு மற்றும் நிதிச் சேவைகளை பயன்படுத்த ஊக்கப்படுத்தவும், விரிவாக்கவும் பொருளாதார வளர்ச்சி அடைய, உள்நாட்டு நிதி நிறுவனங்களுடன் நிதித்துறை இணைந்து செயல்படுகிறது.

## தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ஆவணம்

**5.** உயர்வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாட்டைக் கொண்டு செல்வது, மாநிலத்தின் அனைத்து மக்களும் வளர்ச்சியின் பயனைத் துய்ப்பது மற்றும் உள்கட்டமைப்புகளில் உத்தி சார்ந்த முதலீடுகளை ஊக்குவிப்பது ஆகிய நோக்கங்களுடன், மறைந்த முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்கள், 2012 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22 ஆம் நாளன்று மாநிலத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான ஒரு முன்னோடி முயற்சியாக தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ஐ வெளியிட்டார்கள். மாநில மக்களின் முறையான எதிர்பார்ப்புகளை

நிறைவேற்றி, உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினை அவர்கள் பெறுவதற்காகவும், வறுமையில்லா மாநிலமாகவும், ஒரு நவீன சமுதாயத்தின் அனைத்து அடிப்படை வசதிகளையும் மக்கள் பெற்று வருகின்ற மாநிலமாகவும், மக்கள் சுற்றுச்சூழலுடன் ஒன்றாக இயைந்து வாழ்கின்ற மாநிலமாகவும் தமிழகத்தை உருவாக்குவதே தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ன் முக்கிய நோக்கம் ஆகும்.

**6.** தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ஆவணத்தில், தமிழ்நாட்டை உயர் பொருளாதார ஆற்றல் மிக்கதாக உருவாக்குதல், மிகச்சிறந்த, தரமிக்க மனிதவளக் குறியீடு எய்துதல், அனைவருக்கும் அடிப்படைச் சேவைகள் கிடைக்கும் வகையிலான உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு மேம்பாடு, ஒப்பிடும் பொழுது ஆசிய அளவில் சிறந்த முதலீட்டுச் சூழல் எய்துதல், இந்தியாவின்

அறிவாற்றல் மற்றும் புத்தாக்க மையமாக தமிழ்நாடு முன்னிலை வகித்தல், ஆகிய முக்கிய கொள்கைகள் இடம்பெற்றுள்ளன.

**7.** தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ஆவணம், உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு அரசு, தனியார் மற்றும் அரசு-தனியார் கூட்டுப் பொறுப்பில் 15.00 இலட்சம் கோடி ரூபாய் அளவிலான முதலீடுகளை பெற இயலும் என்று, எதிர்பார்க்கின்றது. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023, பகுதி-2 ஆவணத்தில் மொத்தமாக 217 திட்டங்கள் செயல்படுத்துவதற்காக அடையாளம் கண்டறியப்பட்டுள்ளன. இந்த 217 திட்டங்களில், இரயில்வே, துறைமுகங்கள் மற்றும் வானூர்தித் துறைகளில் 27 திட்டங்கள் மத்திய அரசாலும், மீதமுள்ள 190 திட்டங்கள் மாநில அரசாலும், மாநில அரசு முகமைகள் மற்றும் தனியார் பங்களிப்புடனும் செயல்படுத்தப்படும். மாநில அரசால் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களில், 121 திட்டப்

பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன. 16 திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டும், 6 திட்டங்களுக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணிகள் தொடங்கி நடைபெற்றுவருகிறது.

## தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB)

**8.** தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியமானது, தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டம் 2012 இன் கீழ் அமைக்கப்பட்டு உள்ளது. இவ்வாரியமானது, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களுக்கு பாசனம், நிலத்தடிநீர் செறிவூட்டல் மற்றும் குடிநீர் வழங்குவதற்கான அத்திக்கடவு-அவினாசி திட்டம், நீலகிரி மாவட்டத்தில் சிலஹல்லா சேமிப்பு நீர்மின் திட்டம் நிலை-1 (1000 மெகாவாட்), நெடுஞ்சாலைத் துறைக்கான 3,319 கிலோமீட்டர் நீள சாலை விரிவாக்கத்துக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், சாலை

இணைப்பு வசதிக்காக தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-2 இன் கீழ் நான்கு வழி மாநில நெடுஞ்சாலை அமைத்தல், சென்னை மெட்ரோ இரயில் விரிவாக்கம், மாநகர விரைவு இரயில் போக்குவரத்துத் திட்டத்தை சென்னை பெருநகரப் பகுதியில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் திட்டத்துடன் ஒருங்கிணைத்தல், பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் அளவிற்கு கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், ஜவுளித் தொழில் பூங்காக்களில் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகளை நிறுவுதல், சென்னை மாநகரில் விரைவுப் பேருந்து போக்குவரத்து ஏற்பாடு, தொழிற்சாலைகளின் தேவைகளுக்கென்றே சென்னைக்கும், பெங்களூருக்கும் இடையில் நீர் வழங்கல் கட்டமைப்பை உருவாக்குதல் போன்ற முக்கியமான உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகளை தயாரிப்பதற்காக, திட்டத் தயாரிப்பு நிதியிலிருந்து (PPF) இந்நாள்வரை 277 கோடி ரூபாய் அளவில் ஒப்பளிப்பு செய்துள்ளது.

விரிவான திட்ட அறிக்கைகளைத் தயாரிப்பது இருதரப்பு மற்றும் பன்னாட்டு முகமைகளிடம் நிதியுதவி பெறுவதற்கு திட்டங்களை மாநில அரசு உடனடியாக முன்மொழிய வகை செய்கிறது.

**9.** தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB), பிராந்திய இணைப்புத் திட்டம் - உதான் திட்டத்தின் கீழ், மார்ச், 2018 முதல் நவம்பர், 2018 வரையிலான காலங்களுக்கு, சென்னை - சேலம் மற்றும் சேலம் - சென்னை விமான வழித்தடத்தில் விமானப் போக்குவரத்தினை செயல்படுத்திட, மாநிலத்தின் பங்களிப்பாக 20 சதவீத நிதியான 1.10 கோடி ரூபாயினை தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து (TNIDF) இந்திய விமான நிலையங்கள் பொறுப்பமைப்பிற்கு வழங்கியுள்ளது.

**10.** சென்னை பெருநகரப் பகுதியில் நுண்ணறிவுப் போக்குவரத்து முறையை நிறுவும் திட்டத்தினைச் (Chennai Metropolitian Area Intelligent

Transport System Installation Project) செயல்படுத்துவதற்காக ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை மூலமாக நிதியுதவி பெறுவதற்கு முன்னணியில் நின்று தனது ஆக்கப்பூர்வ பங்களிப்பினை தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB) அளித்துள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கி பங்கேற்புடன், மத்திய அரசின் தொழில் கொள்கை மற்றும் தொழில் வளர்ச்சித் துறை செயல்படுத்தக் கருதியுள்ள கிழக்கு கடலோரப் பகுதி பொருளாதாரப் பெருவழியின் இரண்டாம் நிலையான சென்னை-கன்னியாகுமரி தொழிலகப் பெருவழி (industiral Corridor) மேம்பாட்டுத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பது தொடர்பான, பல்வேறுபட்ட பங்குதாரர்களின் செயல்பாடுகளை இவ்வாரியம் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தி வருகிறது. 24X7 கோயம்புத்தூர் நகர்ப்புற நீர் வழங்கல் திட்டம், சென்னை மாநகரப் பகுதியில் நுண்ணறிவுப் போக்குவரத்து முறை (ஜப்பான்

பன்னாட்டு ஒத்துழைப்பு முகமையின் நிதியுதவியுடன்), சென்னை மாநகரத்தில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் (தொகுப்பு-1 மற்றும் தொகுப்பு-2), தமிழ்நாடு போக்குவரத்து கழகங்களின் மறுசீரமைப்பிற்காக, கே.எஃப்.டபிள்யூ (KfW) நிதியினைக் கோரிப் பெறுதல் மற்றும் பிஎஸ்-VI டீசல் மற்றும் மின்சாரப் பேருந்துகளை கொள்முதல் செய்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் தமிழ்நாட்டில் வெற்றிகரமாக செயல்படுத்திட தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் உதவி செய்துள்ளது.

## திட்டத் தயாரிப்பு நிதி (PPF) மற்றும் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (TNIDF)

**11.** திட்டத் தயாரிப்பு நிதி (PPF) மற்றும் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (TNIDF) ஆகிய இரண்டு நிதியங்கள், தமிழ்நாடு உள்கட்டமைப்பு வளர்ச்சி சட்டம் 2012 இன் கீழ் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றின் நோக்கம் புதிய

உள்கட்டமைப்புத் திட்டங்களை தயாரிக்கவும் அவற்றை செயல்படுத்தவும் உதவுவதே ஆகும்.

திட்டத் தயாரிப்பு நிதியின் (PPF) மூலம், பல்வேறு உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கான சிறந்த ஆலோசகர்கள் மற்றும் வல்லுநர்களின் சேவைகளைப் பெறுதல், அவற்றுக்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் தயாரித்தல், விரிவான திட்ட ஆய்வுகள் செய்தல், திட்ட பங்கேற்பாளர்களின் திறன் மேம்படுத்த உதவுதல், திட்ட ஆராய்ச்சிகள் மற்றும் பிற விதிகளில் பரிந்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக நிதி உதவி செய்யப்படுகிறது.

தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியில் (TNIDF) இருந்து, பல்வேறு உள்கட்டமைப்புத் திட்டங்களின் வடிவமைப்பு, பணி மேம்பாடு, பணி செயலாக்கம், பணி நிர்வகிப்பு, திட்ட மேலாண்மை மற்றும் பிற விதிகளில் பரிந்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக நிதி உதவி செய்யப்படுகிறது.

இவை மட்டுமின்றி, தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து (TNIDF) திட்ட மூலதன உதவி மானியம், திட்ட செயல்பாட்டு மானியம், வருடாந்திர தொகை வழங்க உதவி, பங்கு முதலீடு மற்றும் பிற தேவையான அங்கீகரிக்கப்பட்ட வகைகளில் திட்டங்களுக்கு நிதி உதவிகள் செய்யப்படுகின்றது.

## தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC)

**12.** தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் ஒரு சொத்து மேலாண்மை நிறுவனமாக ஜூலை 2015 ல் நிறுவப்பட்டது. 16 கோடி ரூபாயினை தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் பங்கு ஈவுத் தொகையாகவும் மற்றும் இந்தியன் வங்கி, சிட்டி யூனியன் வங்கி, கரூர் வைசியா வங்கி, யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம், தேசிய வீட்டு வசதி வங்கி மற்றும் கனரா வங்கி ஆகிய வங்கிகளை பங்கு ஈவுதாரர்களாகவும்

கொண்டுள்ளது. மேலும் இந்தியப் பங்குப் பத்திரங்கள் மற்றும் பரிமாற்றக் குழுவின் (SEBI) அனுமதி பெற்று 6000 கோடி ரூபாய் இலக்கினை எய்தும் வகையில் 'மாற்று முதலீட்டு நிதி - வகைப்பாடு 1' என்கிற தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியத்தை தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது.

**13.** தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதியத்தில் 300 கோடி ரூபாய் முதலீடு செய்ய முன்வந்துள்ளது. அதன் ஒரு பகுதியாக 30 கோடி ரூபாய் முதல் இழப்பு ஊக்குவிப்பு மூலதனமாக (First Loss Catalytic Capital Fund) அளித்துள்ளது. அதற்கு ஜப்பான் பன்னாட்டு ஊக்குவிப்பு முகமை (JICA) தமிழ்நாடு முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டம்-2 இன் மூலம் ஆதரவளித்துள்ளது. மேலும், இதில் இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம் 150 கோடி ரூபாய் முதலீடு

செய்வதாக உறுதியளித்துள்ளது. இவை தவிர, ஃபீனிக்ஸ்- எஸ்ஏ என்ற அமெரிக்க நிறுவனம் 600 மில்லியன் அமெரிக்க டாலர்களை (சுமார் ரூ.3,500 - 4,000 கோடி) முதலீடு செய்வதற்கு இசைவுக் கடிதத்தை அளித்துள்ளது. மேலும் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி தவிர தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் தமிழ்நாடு உறைவிட நிதியம் (நிலை 2) என்கிற நிதி அமைப்பை இந்தியப் பங்குப் பத்திரங்கள் மற்றும் பரிமாற்றக் குழு (SEBI) மாற்று உள்கட்டமைப்பு நிதியின் கீழ் சமூக மேம்பாட்டு நிதி வகைப்பாடு 1 ஆக பதிவு செய்துள்ளது. இதன் தொகுப்பு நிதி (Corpus Fund) அளவு 3,000 கோடி ரூபாய் ஆகும்.

**14.** நீர்மின் திட்டங்களைப் புதுப்பித்தல், நவீனமயமாக்குதல் மற்றும் அவற்றின் உற்பத்தித் திறனை அதிகரித்தல் போன்ற தேவைகளுக்காக 500 கோடி ரூபாய் வரை முதலீடு செய்யும் பொருட்டு,

தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்துடன் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இரண்டு திட்டங்கள் முறையே கோதையார் மற்றும் மோயார் ஆகிய இரு நீர்மின் திட்டங்களுக்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும். இது தவிர, தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதியத்திலிருந்து செயல்படுத்த தூத்துக்குடி மாவட்டத்தில் 60 MLD கடல் நீர் சுத்திகரிப்பு ஆலை, தமிழ்நாடு வர்த்தக மையம், கடற்கரை சுற்றுலா தளங்கள் மேம்படுத்துதல் மற்றும் பணி புரியும் மகளிருக்கான தங்கும் விடுதிகள் ஆகிய திட்டத்தில் முதலீடு குறித்து ஆராயப்படுகிறது. அனைத்து துறைகளைச் சார்ந்த உள்கட்டமைப்புத் திட்டங்களை மேம்பாடு செய்யவும், புதிய உள்கட்டமைப்புத் திட்டங்களை செயல்படுத்தவும், திட்ட அடிப்படையில் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியிலிருந்து தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் நிதி உதவி செய்யும்.

# கருவூலக் கணக்குத் துறை

**15.** கருவூலக் கணக்குத் துறையானது கருவூலக் கணக்கு ஆணையரை துறைத் தலைவராகக் கொண்டு நிதித்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இத்துறையின் கீழ் இயங்கும் 6 மண்டல அலுவலகங்கள், 6 சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 3 சார்–சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 32 மாவட்டக் கருவூலங்கள், 1 ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், 1 உதவி முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் 243 சார் கருவூலங்கள், கருவூலம் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

## புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் - 2016

**16.** புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், அரசால் 30.06.2016 க்கு பிறகு மேலும் நான்காண்டுகளுக்கு சில சிறப்பு அம்சங்களுடன் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2016, பொதுத்துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா

காப்பீட்டுக் கழகத்தின் மூலம் 01.07.2016 முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்கள், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் தமிழ்நாடு சட்டப்பேரவையில் இயற்றப்பட்ட சட்டங்களின் கீழ் ஏற்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள், மாநில அரசு நிறுவனங்கள் (விரும்புவன மட்டும்) ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தகுதியுடைய அவர்தம் குடும்ப உறுப்பினர்களின் மருத்துவ சிகிச்சைக்காக நான்காண்டுகளில் நான்கு இலட்சம் ரூபாய் மருத்துவ உதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் காப்பீட்டுக் கட்டணமாக அரசு ஊழியரிடமிருந்து 180 ரூபாய் வீதம் அவர்களது மாதாந்திர ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

**17.** இப்புதிய திட்டத்தில், கீழ்க்காணும் நோய்களுக்கு மருத்துவ சிகிச்சை பெற நிதி

உச்சவரம்பு 7.50 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

i. புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை, கீமோதெரபி, கதிரியக்க சிகிச்சை மற்றும் புற்றுநோய்க் கட்டிகளுக்கான நோய்த் தடுப்பாற்றல் சிகிச்சை முறைகள்.

ii. கல்லீரல், சிறுநீரகம், இதயம், நுரையீரல் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை.

iii. சிக்கலான இதய அறுவை சிகிச்சை மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சை.

iv. விபத்து மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் பல்வகைப்பட்ட எலும்பு முறிவு.

v. இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை, அன்யூரிசிம்ஸ் மற்றும் ஆஞ்சியோபிளாஸ்டி.

vi. தீயினால் ஏற்பட்ட காயங்களுக்கான சிகிச்சை.

**18.** இத்திட்டத்தில் கண்புரை அறுவை சிகிச்சைக்கான மருத்துவ உதவியின் உச்சவரம்பு, ஒரு கண்ணிற்கு 25,000 ரூபாயாகவும், கர்ப்பப்பை

நீக்குவதற்கான அறுவை சிகிச்சை உதவியின் உச்ச வரம்பு 45,000 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விபத்தினால் ஏற்படும் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்படாத (Non Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 113 வகையான சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை நடைமுறைகள் மேற்கொள்வதற்கு, தமிழ்நாடு, புதுச்சேரி, திருவனந்தபுரம், பெங்களூரு மற்றும் புதுதில்லி ஆகிய இடங்களில் உள்ள 986 அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில், கட்டணமில்லா மருத்துவ சிகிச்சைகள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 01.07.2012 முதல் 30.06.2016 வரையிலான நான்காண்டுகளில் 1,85,920 பயனாளிகள் 738.06 கோடி ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர். புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2016 இன் கீழ் 10.05.2019

வரை 1,40,694 பயனாளிகள் 542.91 கோடி ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

## பட்டியல்கள் தானியங்கி முறையில் ஏற்பளிக்கும் திட்டம் (ATBPS)

**19.** தற்போதைய கருவூல செயல்பாடுகளான மாதாந்திரக் கணக்குகள் தயாரித்தல், பட்டியல்கள் கண்டறிதல் மற்றும் பட்டியல்களை ஏற்பளித்தல் போன்றவற்றில் உள்ள சிக்கல்களை களையும் பொருட்டு சம்பளக் கணக்கு அலுவலகங்கள், கருவூலங்கள் மற்றும் சார் கருவூலங்களில் தானியங்கி முறையில் ஏற்பளிக்கும் திட்டம் தொடங்கி செயல்முறையில் உள்ளது. மேலும், இத்திட்டத்தினை முழுதாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு உள்கட்டமைப்பு வசதிகளான கணினி மற்றும் இதர உபகரணங்கள் வழங்குதல் உள் / தமிழ்நாடு அகன்ற வலையமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தருதல், அலுவலகங்களை நவீனப்படுத்துதல் போன்ற வசதிகள் பணியாளர்களின்

வேலைத் தரத்தை மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் இத்திட்டம் வங்கிகள், பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள், மாநில கணக்காயர் ஆகியவர்களுக்கு சிறந்த சேவை வழங்குவதை உறுதி செய்வதோடு கண்காணிப்பிற்கும் உதவியாக அமையும்.

## வலைதள சம்பள பட்டியல் மென்பொருள் (Web Payroll)

**20.** வலைதள சம்பளப் பட்டியல் மென்பொருள் பயன்பாடு, தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறை அலுவலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. சுமார் 23,648 பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் வலைதள சம்பளப் பட்டியல் மென்பொருளைப் பயன்படுத்தி அலுவலகப் பணியாளர்களது சம்பளப் பட்டியல்களை தயார் செய்கின்றனர். அரசு ஊழியர்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய ஒருமித்த தரவுதளத்தின் (Centralized Database) மூலம் மேலாண்மை தகவல் அறிக்கைகளான

பணியாளர்களின் சம்பளம் மற்றும் அதை சார்ந்த பிற விவரங்களையும் பணியாளர்கள் பணியில் சேர்ந்த நாள், ஓய்வு பெற்றவர்கள் விவரம், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் தர ஊதியத்தின்படியும், பதவியின்படியும் ஓய்வு பெற்ற மற்றும் ஓய்வுபெற உள்ள பணியாளர்கள் விவரங்கள் ஆகியவற்றை உடனடியாக பெற உதவும் வகையில் வலைதள சம்பளப் பட்டியல் மென்பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் மனிதவள மேலாண்மைக்கு இத்திட்டம் ஒரு பயனுள்ள கருவியாக அமையும்.

## ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் (IFHRMS)

**21.** ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 10.01.2019 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை ஐந்தாண்டு கால அளவில் 288.91 கோடி ரூபாய் செலவில் அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த நிதி

மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்தினை ஒரு முழுமையான தீர்வு வழங்கும் திட்டமாகச் செயல்படுத்த திருவாளர்கள் அக்சென்சர் சர்வீஸஸ் (பி) லிமிடெட் (M/s Accenture Services Pvt.Ltd) என்ற முகமை, கலந்தாலோசகராக நியமிக்கப்பட்டு, ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளரைத் தேர்வு செய்தல் ஆகிய பணிகள் வழங்கப்பட்டது.

**22.** இத்திட்டத்தினைச் செயல்படுத்த திட்ட ஒருங்கிணைப்பாளராக (System Integrator) விப்ரோ நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழக அரசின் நிதி மற்றும் மனிதவள மேலாண்மையை ஒருங்கிணைக்கும் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள 23,648 பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் நேரடி இணையத்தின் மூலம் பட்டியல்களை கருவூலத்தில் சமர்ப்பிக்க இயலும். இத்திட்டத்தில் வருவாய் வசூல் கணக்குகளை நிகழ்

நேரத்தில் (Real Time) மின்னணு வருவாயாகப் பெறுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது. இதனால் பொது மக்களுக்கு இடையூறின்றி உடனடியாக சேவை கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 9 இலட்சம் அரசுப் பணியாளர்களின் பணிப் பதிவேடுகளை எளிமையான முறையில் பராமரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ள–தோடு, சம்பளப்பட்டியல், பதவி உயர்வு, மாறுதல்கள், விடுப்பு மேலாண்மை (Leave Management) போன்ற விவரங்கள் நிகழ்நேர அடிப்படையில் உடனுக்குடன் பதியப்படும்.

**23.** இம்மென்பொருள் தற்போது நடைமுறையில் உள்ள மென்பொருளுடன் மாநிலம் முழுவதும் இணையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## புதிய கருவூலங்கள் ஏற்படுத்துதல் / கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

**24.** 2011 முதல் 2019 வரையிலான கடந்த எட்டு ஆண்டுகளில் 37 புதிய சார்கருவூலங்கள் ஏற்படுத்தப்பட்டு, தற்போது மாநிலத்தில் மொத்தம் 243 சார்கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், அரசு 78 சார் கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக ஆணை வழங்கியதில் 58 சார் கருவூலங்களின் கட்டடப் பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள 20 சார் கருவூலங்களுக்கு கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**25.** மேலும், திருநெல்வேலி மாவட்டக் கருவூலத்திற்கு புதிய கட்டடமும், நிதித்துறை சார்ந்த 6 அலுவலகங்களுக்கு சென்னை நந்தனத்தில் உள்ள “அம்மா வளாகம்” அடுக்குமாடி நிதித்துறைக்

கட்டடத்தில் கூடுதல் இரண்டு தளங்களும் கட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

**26.** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் 2018-19 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது அறிவித்தவாறு "ஒருவட்டம் – ஒரு சார்கருவூலம்" என்ற கொள்கையின்படி சார் கருவூலங்கள் இல்லாத வட்டத் தலைமையிடங்களில் புதிய சார் கருவூலங்கள் அமைப்பதற்கான தேவையினை அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர், கருவூலத்துறை மண்டல இணை இயக்குநர் மற்றும் மாவட்ட கருவூல அலுவலர் அவர்களுடன் ஒருங்கிணைந்து ஆராயும் பொருட்டு மாவட்டங்களில் குழுக்கள் அமைக்கப்பட்டன. அதன்படி குழுக்களிடமிருந்து அறிக்கை பெறப்பட்டு வருகிறது.

## அரசு மின்னணு சந்தை (GeM)

**27**. அரசுத் துறைகளின் 'பொருள் மற்றும் சேவை' கொள்முதலுக்காக நேரடி (online) மின்னணு சந்தைத் திட்டத்தை மத்திய அரசு துவக்கியுள்ளது. இது காகிதமற்ற மற்றும் நேரடி பணப் பரிவர்த்தனை இல்லாத கொள்முதலாகும். இதன்மூலம் தனி நபர் குறுக்கீடு தவிர்க்கப்படுகிறது.

**28.** கருவூலம் மற்றும் கணக்குத் துறை, இந்த மின்னணு சந்தைத் திட்டத்தை அனைத்து துறைகளுக்கும் நடைமுறைப்படுத்த சீரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதுடன், அதற்கென மாநில மின்னணு சந்தைத் தொகுப்புக் கணக்கு தொடங்கப்பட்டுள்ளது.

**29.** அரசு மின்னணு சந்தையினால் குறைந்த விலை, எளிய நடைமுறை, உயர்திறன் மற்றும் வெளிப்படைத் தன்மை போன்ற பிற நன்மைகளும் கிடைக்கும்.

## பொது நிதி மேலாண்மை அமைப்பு (PUBLIC FINANCIAL MANAGEMENT SYSTEM)

30. பொது நிதி மேலாண்மை அமைப்பு (PFMS) என்பது இந்திய அரசின் செலவினத் துறை, பொதுக் கணக்குக் கட்டுப்பாட்டாளரால் நிர்வகிக்கப்படும் ஒரு மென்பொருள் (application) ஆகும். இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு மாநில அரசின் ஆணைகள் மற்றும் வழிகாட்டுதலுக்கு ஏற்ப பொது நிதி மேலாண்மை அமைப்பினை செயலாக்க, சீரிய முறையில் கருவூலம் மற்றும் கணக்குத் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த மென்பொருள் வாயிலாக, பணம் வழங்குதல் நிதி நிலையினைக் கண்காணித்தல், கணக்குகளை ஒத்திசைவு செய்து அறிக்கை வெளியிடுதல் முதலானவற்றை மேம்படுத்த இயலும். திட்ட மேலாளர்கள் நிதிப் பயன்பாடு இறுதிக் கட்டம் வரை முறையாக சென்றடைந்ததைக் கண்காணிக்க இம்மென்பொருள் ஒரு நல்ல தளமாக அமைகிறது.

**31.** பல்வேறு துறைசார்ந்த முகமைகள், அவர்களின் திட்ட மேலாளர்கள் குறித்த விவரங்களை பொது நிதி மேலாண்மை அமைப்பில் பதிவு செய்து வருகின்றன. இப்பணி முன்னேற்றத்தினை, சீரான இடைவெளியில் கூர்ந்தாய்வு செய்து கண்காணிப்பதோடு, திட்ட செயல்படுத்தும் முகமை அலுவலர்களுக்குத் தேவையான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

**32.** பொது நிதி மேலாண்மை அமைப்பில் இணைக்கப்பட்டுள்ள பயன்படுத்தும் துறைகள் தங்களது பணி முன்னேற்ற மதிப்புக்களை உள்ளீடு செய்வதற்காக கருவூலக் கணக்குத்துறை ஒரு வலைதளத்தினை உருவாக்கிப் பராமரித்து வருகிறது.

# உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

**33.** மாநிலத்திலுள்ள நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், வேளாண்மை விற்பனைக் குழுக்கள், உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள் மற்றும் இதர நிறுவனங்களின் கணக்குகளை அவற்றுக்குரிய சட்ட விதிகளின் கீழ் தணிக்கை செய்யும் பணி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையைச் சார்ந்ததாகும். இரண்டாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம், 2014 (த.நா. சட்ட எண்:24) நிறைவேற்றப்பட்டு 14.12.2014 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள் 24.08.2016 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

**34.** தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014–இன் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள

நிறுவனங்களின் தணிக்கையைத் தவிர பிரிவு 5-ன் படி அரசின் முன் அனுமதியுடன் இதர நிறுவனங்களின் தணிக்கையும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரால் சட்டப்பூர்வமாக மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் சட்டம் 2014 பிரிவு 20–இன் கீழ் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் தன்னால் தணிக்கை செய்யப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் மீதான தொகுப்பு அறிக்கையை ஒவ்வொரு ஆண்டும் அரசுக்கு சமர்ப்பிக்கவேண்டும். அரசு அதனை சட்டமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

**35.** தமிழ்நாடு சட்டமன்றத்தில் தணிக்கை அறிக்கையினை தயாரித்து சமர்ப்பிப்பது குறித்து மாநில கணக்காயரால் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தணிக்கை அறிக்கை வடிவத்தை அவ்வப்போது மாற்றி அமைக்கவும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை விதிகள் 2016 வகை செய்கிறது.

**36.** தற்போது பின்வரும் நிறுவனங்கள் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

| **வ. எண்** | **நிறுவனங்கள்** | **மொத்த எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | மாநகராட்சிகள் | 12 |
| 2 | நகராட்சிகள் | 124 |
| 3 | பேரூராட்சிகள் | 528 |
| 4 | மாவட்ட ஊராட்சிகள் | 31 |
| 5 | ஊராட்சி ஒன்றியங்கள் | 385 |
| 6 | பல்கலைக் கழகங்கள் | 23 |
| 7 | நூலக ஆணைக்குழுக்கள் | 32 |
| 8 | வேளாண்மை விற்பனைக்குழுக்கள் | 23 |
| 9 | தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம் | 1 |
| 10 | வேளாண் விற்பனைக் கழக பொறியியல் பிரிவு | 3 |
| 11 | கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி | 1 |
| 12 | உள்ளூர் திட்டக் குழுமங்கள் | 28 |

| வ. எண் | நிறுவனங்கள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 13 | கிராம ஊராட்சிகள் (ஆண்டுதோறும் சுழற்சி 22% முறையில்) மொத்த கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை - 12524 | 2801 |
| 14 | பல்வகை நிறுவனங்கள் | 12 |
| 15 | தேசிய சமூக நலத் திட்டம் | 32 |
| | **மொத்தம்** | **4036** |

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் நோக்கம்

**37.** உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளைச் சரிபார்த்தல், வரவு செலவுகள் முறையாக உள்ளனவா எனச் சரிபார்த்தல், மேற்படி வரவு செலவுகள் சம்பந்தப்பட்ட சட்டத்திற்கு உட்பட்டும் விதிகளின்படியும், அரசாணைகளின்படியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பதனை உறுதி செய்தல், உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் அவ்வமைப்புகளின் செயல்பாட்டின் உண்மை நிலையைப் பிரதிபலிக்கின்றனவா என்பதை

சரிபார்த்தல் ஆகிய நோக்கங்களோடு உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரி செலுத்துவோரின் நலன்கள் பாதுகாக்கப்படுவதனை உறுதி செய்வதோடன்றி உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு மற்றும் பிற நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள் வழங்கும் நிதி முழுவதும் வழங்கப்பட்ட காரணங்களுக்காக பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் அவை எதிர்ப்பார்க்கும் பயனாளிகளின் நலனுக்கு பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் தணிக்கையில் உறுதி செய்யப்படுகிறது.

## கிராம ஊராட்சி அமைப்புகளின் சோதனைத் தணிக்கை

**38.** கிராம ஊராட்சிகளைப் பொறுத்தமட்டில் மொத்த ஊராட்சிகளின் எண்ணிக்கையில் 22 சதவிகிதம் சோதனைத் தணிக்கையாக உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு

வருகின்றது. மொத்தம் உள்ள 12,524 ஊராட்சிகளில் ஆண்டு தோறும் 2,801 கிராம ஊராட்சிகளில் சோதனைத் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

## நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் உடன் நிகழ் தணிக்கை (Concurrent Audit)

**39.** தற்போது 12 மாநகராட்சிகளிலும், 17 நகராட்சிகளிலும் மற்றும் 14 பல்கலைக் கழகங்களிலும் உடன் நிகழ் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2000-2001 ஆம் ஆண்டு முதல், 385 ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் காலாண்டுத் தணிக்கை முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி 116 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு ஆய்வாளர் மற்றும்

ஒரு துணை ஆய்வாளர் அல்லது ஒரு உதவி ஆய்வாளர் அடங்கிய ஒரு குழு வீதம் தணிக்கைக் குழுக்கள் இதற்கென அமைக்கப்பட்டுள்ளன.

## 40. மாநகராட்சிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நகராட்சிகளில் உடன்பின் தணிக்கை (Immediate Post Audit) முறையை அமல்படுத்தப்படுதல்

அ) உடன்நிகழ் தணிக்கை செயல்படுத்தப்-படுகின்ற கீழ்க்கண்ட 12 மாநகராட்சிகளிலும் 17 நகராட்சிகளிலும் உடன்பின் தணிக்கை செயல்பட்டு வருகின்றது. இம்முறையின்படி செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு, தொகை வழங்கப்பட்டவுடன் செலவுச் சீட்டுக்கள் தணிக்கைக்கு உடனடியாக வழங்கப்பட்டு, அச்செலவுச் சீட்டுகளின் தணிக்கை உடனுக்குடன் செய்யப்பட்டு, குறைபாடுகள் நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்படுகின்றது. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை உடனுக்குடன் நிர்வாகத்தால் களைய இச்செயல்முறை வழிகோலுகிறது.

| வ. எண் | மாநகராட்சிகள் (உடன்நிகழ் தணிக்கை) | நகராட்சிகள் (உடன்நிகழ் தணிக்கை) |
|---|---|---|
| 1. | சென்னை | ஆவடி |
| 2. | சேலம் | காஞ்சிபுரம் |
| 3. | கோயம்புத்தூர் | கடலூர் |
| 4. | திருச்சி | கரூர் |
| 5. | மதுரை | கும்பக்கோணம் |
| 6. | திருநெல்வேலி | புதுக்கோட்டை |
| 7. | தூத்துக்குடி | பழனி |
| 8. | வேலூர் | பொள்ளாச்சி |
| 9. | திருப்பூர் | ஊட்டி |
| 10. | ஈரோடு | நாகர்கோவில் |
| 11. | தஞ்சாவூர் | மறைமலைநகர் |
| 12. | திண்டுக்கல் | தாம்பரம் |
| 13 | | பல்லாவரம் |
| 14 | | திருவண்ணாமலை |
| 15 | | கொடைக்கானல் |
| 16 | | இராஜபாளையம் |
| 17 | | கோவில்பட்டி |

ஆ) உடன் நிகழ் தணிக்கையின்போது, தணிக்கையில் கண்டறியப்படும் தணிக்கை மறுப்புரைகள், தணிக்கைச் சீட்டுகள் வாயிலாக உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அவற்றிற்குப் பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு குறைகள் சரி செய்யப்பட்டதை உறுதி செய்யுமிடத்து, அந்த தணிக்கை மறுப்புரைகள் நீக்கப்பட்டு, நிலுவையில் உள்ள மறுப்புரைகளையும் வரவு மற்றும் செலவுகள் தொடர்பான பத்திகளும் இறுதி செய்யப்பட்டு அவற்றை உள்ளடக்கியதாக தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன.

## உடன்நிகழ் தணிக்கைக்குட்படாத பிற அமைப்புகளின் தணிக்கை

**41.** உடன்நிகழ் தணிக்கைக்கு உட்படாத எஞ்சியுள்ள 107 நகராட்சிகள், 9 பல்கலைக் கழகங்கள், இதர உள்ளாட்சி அமைப்புகளான பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், விற்பனைக் குழுக்கள், உள்ளூர்

நூலக ஆணைக்குழுக்கள், உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் பிற பல்வகை நிறுவனங்களின் தணிக்கை, ஆண்டுதோறும் மேற்படி நிறுவனங்களிலிருந்து ஆண்டுக் கணக்குகள் பெறப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 42. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் இயல்புநிலைக் கணக்கு அடிப்படையிலான (Accrual based) கணக்கு வைப்பு முறையை செயற்படுத்துதல்

i) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பின்பற்றப்பட்டு வந்த ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறைக்குப் பதிலாக மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் இயல்புநிலைக் கணக்கு அடிப்படையிலான கணக்கு வைப்பு முறை (Accrual based Accounting System) 1999-2000, 2000-2001 ஆகிய கணக்காண்டுகளிலிருந்து இரு கட்டங்களாக செயற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து பேரூராட்சிகளிலும் 2002-2003 ஆம் ஆண்டு முதல் இந்த கணக்கு முறை

செயல்படுத்தப்பட்டுள்ளது. 2016-2017 முதல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 7 இலக்க குறியீடுகளை கொண்ட தேசிய அளவிலான நகராட்சிகளின் கணக்கு நடைமுறை சார்ந்த கணக்கீடு முறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ii) ஓர் ஆண்டின் நிதி சார் நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள உதவும் வருவாய் மற்றும் செலவுக் கணக்குகளையும் (Income and Expenditure Account) ஒரு குறிப்பிட்ட கால அளவில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் உண்மையான நிலையை அறிந்து கொள்ள உதவும் ஐந்தொகைக் கணக்குகளையும் (Balance Sheet) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு வைப்பு முறை கோட்பாட்டின்படி தயாரித்து கணக்குகள் பேணுவதே இந்த கணக்கு முறையின் உள்ளடக்கம் மற்றும் நோக்கமாகும்.

iii) இந்த நடைமுறையினால் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்கள் அவற்றின் சொத்துக்களை உரிய மதிப்பீட்டு முறைகளோடும், சொத்துப் பதிவேட்டின் மூலமும் கணக்குகளில் சேர்த்து அறிந்துகொள்ள முடியும். வெளிப்படைத் தன்மையுள்ள இந்த புதிய கணக்கு முறைகளைச் செயல்படுத்தியிருப்பதால், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பல்வேறு மூலதன திட்டங்களுக்கும் நலத்திட்டங்களுக்கும் நிதியுதவி அளிக்க பல நிதி நிறுவனங்கள் முன் வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

**43. உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் ஆண்டுக் கணக்குகளுக்கு தணிக்கை சான்று வழங்குதல்:**

i) உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகளுக்குத் தணிக்கைச் சான்று, கடன் வழங்கும் பல்வேறு நிறுவனங்களிலிருந்து நிதி பெறுவதற்கு அத்தியாவசியமானதாகும். மேலும் தணிக்கைச் சான்று

அளிக்கப்படாத கணக்குகள் அங்கீகாரமற்றது என்பது சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாகும். எனவே அரசாணை பல்வகை எண். 93, நிதி (நிதிக்குழு-IV) துறை, நாள்.28.03.2003–இல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்பட்டு வரும் இயல்பு நிலை கணக்குப்பதிவு (Accural Based Accounting) அடிப்படையிலான கணக்குகள் முறைப்படி தயார் செய்யப்பட்டு ஆண்டுக் கணக்குகள் இத்துறையால் தணிக்கை செய்யப்பட்டு சான்றளிக்கப்படுகின்றன.

ii) பல்கலைக் கழக மானியக்குழு, மாநில / மத்திய அரசு மற்றும் இதர நிதி அளிக்கும் நிறுவனங்களால் இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட பல்கலைக் கழகங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள் பயன்படுத்தபட்டதற்கு இத்துறையினால் தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

## 44. தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யும் நடைமுறை

i) தணிக்கை அறிக்கையின் மீதான தொடர் நடவடிக்கை எடுப்பது இத்துறையின் இன்றியமையாத பணிகளில் ஒன்றாகும். தணிக்கையின் போது கண்டறியப்படும் பெரும் முறைகேடுகள் உடனடியாக சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாக அலுவலர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பெரும் முறைகேடுகள் மற்றும் தொகை இழப்புகள் பற்றிய விவரங்கள் மாதாந்திர காலமுறை அறிக்கை மூலம் அரசுக்கும், சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைகளின் தலைவர்களுக்கும் தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தெரியப்படுத்தப்படுகின்றன.

ii) தணிக்கை மறுப்புரைகளுக்கு பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு திருப்தியான விளக்கங்கள் அளிக்கும் நிலையில் தணிக்கைத் தடைகள்

நீக்கப்படுகின்றன. மேலும் தணிக்கைத் தடைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு, தொடர்புடைய நிர்வாகத் துறை ஏற்பாடு செய்யும் கூட்டமர்வின் மூலமாகவும், இத்துறையின் மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களால் தணிக்கைத் தடைகளுக்கு உடனடி தீர்வு காணப்படுகிறது.

iii) தணிக்கையின் போது தொடக்கநிலை மற்றும் இறுதி நிலை விவாதமுறை பின்பற்றப்படுவதால், தணிக்கையில் அவ்வப்போது சுட்டிக்காட்டப்படும் தவறுகளைச் சரி செய்ய இது வாய்ப்பாக அமைகிறது.

## 45. மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு மற்றும் மாநில அளவிலான உயர் நிலைக் குழு அமைத்தல்

i) ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட உயர்நிலைக் குழுக்களும், ஊரக

வளர்ச்சி ஆணையரை தலைவராகக் கொண்டு மாநில உயர்நிலைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. 2018-2019 ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான 89 உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 1,225 தணிக்கை தடைகள் மீது முடிவெடுக்கப்பட்டன.

ii) பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மாநில அளவில் பேரூராட்சிகளின் இயக்குநரை தலைவராகக் கொண்டும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டும் பேரூராட்சிகளுக்கான உயர்நிலைக் குழுக்கள் அ.ஆணை எண்.1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (பேரூ2), நாள் 04.01.2007–ல் அமைத்து ஆணையிடப்பட்டுள்ளன.

iii) அனைத்து மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளுக்கான மாவட்ட உயர் நிலைக் குழு, மாவட்ட ஆட்சித் தலைவரை

தலைவராகக் கொண்டும், மாநில அளவிலான உயர்நிலைக் குழு நகராட்சி நிர்வாக இயக்குநரை தலைவராகக் கொண்டும் அரசு ஆணை எண்.65, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 22.5.2007- இன்படி அமைக்கப்பட்டுள்ளது. 2018-2019 ஆம் ஆண்டில் நகராட்சிகளுக்கு 9 உயர்நிலை குழுக் கூட்டங்கள் மாவட்ட அளவில் நடத்தப்பட்டு, 401 தணிக்கை மறுப்புரைகள் மீது முடிவெடுக்கப்பட்டன.

## சிறப்புப் பணிகள்

**46.** வழக்கமான தணிக்கைப் பணிகளுடன் கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**அ) உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல்:**

நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் ஓய்வூதிய / குடும்ப ஓய்வூதியப் பயன்களுக்கு சான்று / ஒப்பளிப்பு மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 01.03.2019 அன்றைய நிலவரப்படி 30,669 ஓய்வூதியதாரர்கள், நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர். ஓய்வூதியத்திற்கான தொகை சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களால் மாநில நிதி ஆணைய பகிர்வு நிதி தொகையிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## <u>ஆ) உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்கள் குறைகள் தீர்த்தல்</u>

உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் தங்கள் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் முன்மொழிவுகள் தொடர்பான குறைகளைக் களைவதற்கும் தேவைப்படும் விவரங்களை காலதாமதம் இன்றி உடன் பெற்றுக் கொள்வதற்காகவும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் தகவல் மையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

## <u>இ) நகராட்சி ஓய்வூதியதாரர்கள் நல மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டம் நிர்வகித்தல்</u>

ஓய்வூதியதாரர்கள் நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அரசாணை (பல்வகை) எண்.120, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.25.5.1999 இன் படி, நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு 01.08.1999 முதல்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. 2018-2019 ஆம் ஆண்டில் ஓய்வூதியதாரர்கள் நலத்திட்டத்தின் கீழ் 277 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 101.58 இலட்சம் ரூபாயும், குடும்ப பாதுகாப்பு திட்டத்தில் 128 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு, 54.95 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**ஈ) ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்கள் நல மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டம் நிர்வகித்தல்**

ஓய்வூதியதாரர்கள் நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அரசாணை (பல்வகை) எண்.23, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ7) துறை, நாள்.15.03.2013 இன் படி, ஊராட்சி

ஒன்றிய ஓய்வூதியதாரர்களுக்கு 01.04.2013 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் கீழ் 2018-2019–ஆம் ஆண்டில் ஓய்வூதியதாரர்கள் நலத்திட்டத்தில் 70 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 18.87 இலட்சம் ரூபாயும் குடும்ப பாதுகாப்புத் திட்டத்தில் 226 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 79.10 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## உ) உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்

உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும் அவற்றிலிருந்து செய்யப்பட்ட முதலீடுகளும் அரசால் 1967 ஆம் ஆண்டு முதல் ஏற்கப்பட்டன. வருங்கால வைப்பு நிதிக்

கணக்குகளின் இருப்புகளுக்கு வட்டி வழங்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2018-2019 ஆம் ஆண்டில் 18 கோடி ரூபாய் அளவிற்கு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு அத்தொகை முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது வருங்கால வைப்பு நிதி வட்டியாக அளிக்கப்பட்டுள்ளது.

## ஊ) அறக்கட்டளைகளின் பொருளாளர்

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், 01.04.1952 முதல் இத்துறையால் பராமரிக்கப்படும் அறக்கட்டளைகளின் பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். அறக்கட்டளைகளை அரசு ஏற்று ஒப்பளித்து அறக்கட்டளைகளின் நிருவாகத் திட்டங்களை அரசிதழில் வெளியிடுகிறது. இந்த அறக்கட்டளை நிதிக்கான வட்டித் தொகை, தொடர்புடைய நிறுவனங்களுக்கு அவர்களிடமிருந்து வரும் கோரிக்கைகளின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது.

தற்போது அறக்கட்டளை நிதிப் பொருளாளர் கட்டுப்பாட்டில் 17.75 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 4 மத்திய அறக்கட்டளைகளும், 29.56 கோடி ரூபாய் மதிப்புள்ள 886 மாநில அறக்கட்டளைகளும் உள்ளன. கடந்த 2018-19 ஆம் ஆண்டில் அறக்கட்டளைகளிலிருந்து கிடைக்கப் பெற்ற வட்டி வரவுகளிலிருந்து 242 அறக்கட்டளை நிறுவனங்களுக்கு உதவித் தொகைகள், பரிசுகள் மற்றும் பதக்கங்கள் முதலியன வழங்கப்படுவதற்காக 38.76 இலட்சம் ரூபாய் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்படும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத் தணிக்கை

**47.** அரசாணை (நிலை) எண். 260 நிதி (ஓய்வூதிய குறை தீர்ப்பு) துறை, நாள். 15.10.2015–ன் படி உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் உள்ளாட்சி அமைப்பு

பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத் (Contributory Pension Scheme) தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் பணியாளர்களின் சந்தா மற்றும் நிர்வாக பங்களிப்பின் சரித்தன்மை உறுதி செய்யப்படுகிறது. கடந்த 2017-2018 ஆம் ஆண்டு முடிய 385 ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியக் கணக்குகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இதர உள்ளாட்சி அமைப்புகளான 11 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சி நிறுவனங்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட தரவுகளையும் அதன் சரித்தன்மையினையும் தணிக்கைத் துறையினரால் சரிபார்க்கப்பட்டு தணிக்கையில் அங்கீகரித்து ஒப்புதலளிக்கப்பட்டு வருகிறது.

## தணிக்கை நிலை

**48.** கடந்த 2017-18 ஆம் ஆண்டுக்கான அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் தணிக்கை முடிவுற்றுள்ளது. கடந்த 2017-18 ஆம் ஆண்டிற்கான கிராம ஊராட்சிகளின் 22 சதவீதம் சோதனைத் தணிக்கை, முன்னேற்றத்தில் உள்ளது. கடந்த 2018-19 ஆம் ஆண்டிற்கான ஊராட்சி ஒன்றியங்களின் தணிக்கை 30.09.2019 இல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் மற்ற நிறுவனங்களின் 2018-19 ஆம் ஆண்டிற்கான தணிக்கை 31.12.2019–க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## தணிக்கைக் கட்டணம்

**49.** பல்கலைக் கழகத் தணிக்கைக்கு 100 சதவீதம் தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள்

தணிக்கைக்கு 50 சதவீதம் தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், வேளாண் விற்பனை குழுக்கள் தணிக்கைக்கு மொத்த செலவினத்தில் 2 சதவீதமும் இத்துறையால் வசூலிக்கப்படுகிறது. கடந்த 2018-2019 ஆம் ஆண்டிற்கான கேட்பு தொகையான 1,488.68 இலட்சம் ரூபாயில், மேற்படி நிறுவனங்களால் தணிக்கைக் கட்டணமாக 1,379.87 இலட்சம் ரூபாய் 2018-19 ஆம் நிதியாண்டில் செலுத்தப்பட்டுள்ளது.

## தணிக்கைத் தடைகள் நீக்கம் சார்பான தொகை பிடித்தம்

**50.** கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் சார்பான தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்த வகையில் 2018-2019 ஆம் ஆண்டில் 3,987.17 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

# கூட்டுறவு தணிக்கைத் துறை

**51**. சந்தானம் குழு மற்றும் நிர்வாக சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகளின்படி கூட்டுறவு தணிக்கை துறையானது 17.06.1981 முதல் தனித் துறையாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 1983 இன் 80-வது பிரிவின்படி பன்மாநில கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர, 14 நிர்வாக பதிவாளர்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையை மேற்கொள்வதே இத்துறையின் முக்கியமான பணியாகும்.

**52.** கீழ்க்காணும் நிர்வாகப் பதிவாளர்கள் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை கூட்டுறவு தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்கு உட்பட்டவையாகும்.

| வ. எண். | நிர்வாகப் பதிவாளர்களின் விவரம் | கூட்டுறவு சங்கங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 8558 |
| 2. | கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் | 1344 |
| 3. | தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர் | 311 |
| 4. | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் | 393 |
| 5. | தலைமைச் செயல் அலுவலர், பனைப்பொருள் வளர்ச்சி வாரியம் | 504 |
| 6. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) | 822 |
| 7. | மீன் வளத் துறை இயக்குநர் | 1330 |
| 8. | கால்நடைப் பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவப்பணிகள ஆணையர் | 110 |
| 9. | சர்க்கரைத் துறை ஆணையர் | 17 |
| 10. | வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்) | 65 |
| 11. | வேளாண் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு சங்கங்களின் இயக்குநர். | 117 |
| 12. | பட்டு வளர்ச்சித் துறை, இயக்குநர் | 24 |
| 13. | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டம் துறை இயக்குநர் | 122 |
| 14. | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை இயக்குநர் | 51 |
| | **மொத்தம்** | **13768** |

**கூட்டுறவு தணிக்கைத் துறையின் நோக்கம்**:

**53.** கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை தணிக்கை செய்தல், அச்சங்கங்களின் இருப்பு நிலைக் குறிப்பு மற்றும் இலாப நட்டக் கணக்குகள் முறையாக தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதிப்படுத்துவது கூட்டுறவு தணிக்கைத் துறையின் முதன்மைப் பணியாக உள்ளது. மேலும், கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், விதிகள் மற்றும் நடைமுறைகளின் படி செயல்படுவதை தணிக்கை செய்வதன் மூலம், உறுப்பினர்கள் அறிந்து கொள்ளும் வகையில் தணிக்கை செய்வதன் மூலம் இத்துறை உதவியாக இருந்து வருகிறது. மேலும், அரசின் நிதியுதவி எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காகவே செலவிடப்பட்டு

உறுப்பினர்களும், சமுதாயமும் முழுமையாகப் பயன் அடைந்துள்ளனர் என்பதையும் உறுதி செய்கிறது.

## நகர வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளுதல்:

**54**. முனைவர் வைத்தியநாதன் குழுவின் அறிக்கை நடைமுறைக்குப் பிறகு, 2009 ஆம் ஆண்டிலிருந்து அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகளின் சட்டப்பூர்வ தணிக்கை மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியின் பரிந்துரையின் படி 25 கோடி ரூபாய்க்கு மேல் வைப்பு தொகைகளைக் கொண்டுள்ள நகர கூட்டுறவு வங்கிகளின் சட்டப்பூர்வ தணிக்கை, பட்டயக் கணக்காளர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு தணிக்கைத் துறையைச் சேர்ந்த தணிக்கையாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட வங்கிகளின் உடன் நிகழ் தணிக்கைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## சட்டப் பூர்வ தணிக்கை மற்றும் தணிக்கைக் கட்டணம்

**55.** சிறு பிரதம கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பூர்வ தணிக்கை, 45 நாட்களுக்குள் முடிக்கப்படவேண்டும். தணிக்கை மேற்கொள்ளும் காலத்திற்கு தணிக்கைக் கட்டணம் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்படுகிறது. கடந்த 01.04.2018 முதல் 31.03.2019 வரையிலான காலத்தில் 2.57 கோடி ரூபாய் தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. அடிப்படைவிதி 127 விதிமுறைகளின்படி அதிக அளவிலான வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பெரிய கூட்டுறவுச் சங்கங்களில், முழுநேர தணிக்கையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு, தணிக்கைக்கு 45 நாட்களுக்கு மேல் அனுமதிக்கப்பட்டு தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அரசாணை (நிலை) எண்.340, நிதி (கூட்டுறவு தணிக்கை)த் துறை,

நாள்: 21.09.2012- இன் படி, இத்தணிக்கைக்கு கட்டணமாக 45 சதவீத சம்பளத் தொகை சங்கங்களிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது. 2018-2019 ஆம் ஆண்டில் அடிப்படை விதி கட்டணமாக 12.91 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டுள்ளது.

## தணிக்கை முன்னேற்ற நிலை

**56.** கடந்த ஐந்தாண்டுகளில் தணிக்கை முன்னேற்ற விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | தணிக்கை வருடம் | மொத்த சங்கங்கள் | தணிக்கை முடிக்கப்பெற்றவை மற்றும் அறிக்கைகள் வழங்கப்பட்டவை | நிலுவை சங்கங்கள் |
|---|---|---|---|---|
| 1 | 2013-2014 | 15955 | 15416 | 539 |
| 2 | 2014-2015 | 14644 | 14123 | 521 |
| 3 | 2015-2016 | 14017 | 13436 | 581 |
| 4 | 2016-2017 | 14007 | 13320 | 687 |
| 5 | 2017-2018 | 13768 | 12460 | 1308 |

**57.** கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகள் ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரையிலான நிதியாண்டிற்கு உரியதாகும். எனவே அந்நிதியாண்டு முடிந்த பின்னரே

தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி 2017-2018 ஆம் ஆண்டிற்கான மொத்தமுள்ள 13,768 சங்கங்களில் 12,460 கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை 2018-2019 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை 30.09.2019-க்கு முன்னர் முடிக்கப்படும். தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 இன் பிரிவு 81-ன் கீழ் விசாரணை நிலுவையில் உள்ளவை, வணிக குற்றப் புலனாய்வுத் துறை விசாரணையில் உள்ளவை, நீதிமன்ற வழக்கு காரணமாக புத்தகங்கள் கிடைக்கப் பெறாமை, மற்றும் கணக்கு எழுதப்படாமல் உள்ளவை ஆகிய காரணங்களினால் 2017-2018 ஆம் ஆண்டுவரை சில சங்கங்களின் தணிக்கை முடிக்கப்படாமல் உள்ளது. இவற்றை விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## தனி அறிக்கைகள் (Special Reports)

**58**. தணிக்கையில் கடுங்குறைகள் காணும்போது அது தொடர்பான அனைத்து விவரங்களும் தனி அறிக்கைகள் மூலம் சம்பந்தப்பட்ட நிர்வாகப் பதிவாளருக்கு உடன் தெரிவிக்கப்படுகிறது. 2018-2019 ஆம் ஆண்டில் 64.36 கோடி ரூபாய் அளவிலான 619 தனி அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

## புதிய இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர்களை பணி நியமனம் செய்தல்:

**59**. இத்துறை பணியிடங்களை மறுசீரமைப்பு செய்துள்ளது. காலியாகவுள்ள 685 துவக்க நிலை இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பணியிடங்களில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடிப் பணி நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தணிக்கையாளர்களின் திறன் மேம்படுத்துதல்

**60.** தணிக்கையாளர்களின் திறமை மற்றும் தணிக்கையின் தரம் இவற்றை மேம்படுத்த பல்வேறு வகையான பயிற்சிகளும், வருடந்தோறும் மூன்று நாட்களுக்கு புத்தாக்கப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகிறது.

## தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமை திட்டம் (AIMS)

**61**. தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமை என்பது கணினி மற்றும் இணையதளத்தில் இயங்கக் கூடிய மென்பொருளாகும். இதன் மூலமாக தணிக்கை தொடர்பான தகவல்களான தணிக்கைத் திட்டம் சமர்ப்பித்தல் மற்றும் ஒப்புதல் வழங்குதல், தணிக்கை அட்டவணை தயார் செய்தல், தணிக்கை முன்னேற்றம், தணிக்கையாளர்களின் நாட்குறிப்புகள் சமர்ப்பித்தல் மற்றும் ஒப்புதல் வழங்குதல், மின்னணுத் தணிக்கை அறிக்கை சமர்ப்பித்தல்,

தணிக்கைக் கட்டணம், அடிப்படை விதிக் கட்டணம் வசூல் விவரங்கள், தனி அறிக்கை விவரங்கள் ஆகியவற்றை உடனுக்குடன் இணையவலை வழியாக பெறலாம். தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமை இத்துறையின் மின் ஆளுமை முயற்சிகளுக்கு அச்சாணியாக விளங்குகிறது.

# சிறுசேமிப்புத் துறை

**62.** குடிமக்களிடம் சிக்கனம் மற்றும் சேமிக்கும் பழக்கத்தினை ஊக்குவித்தலே சிறுசேமிப்புத் திட்டத்தின் தலையாய நோக்கமாகும். இந்தியாவில் சிறுசேமிப்புத் திட்டங்கள் தனிநபர் வீட்டுச் சேமிப்பிற்கு முக்கிய ஆதாரமாக விளங்குகின்றது. சிறு முதலீட்டாளர்களையும் சேமிப்பு இயக்கத்தின்கீழ் கொணர்ந்து, அதன் மூலம் அவர்களின் முதலீட்டிற்கு அதிக பாதுகாப்பு அளித்து, அதே நேரத்தில் முதலீட்டின்மீது கணிசமான வட்டி கிடைப்பதற்கும் உறுதி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டு மக்களிடம் சிக்கனம் மற்றும் சேமிப்பின் பயன்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, அஞ்சல் துறையின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வரும் சிறுசேமிப்புத் திட்டங்களை ஊக்குவிக்கும் பணியில் மாநில சிறுசேமிப்பு ஆணையரகம் ஈடுபட்டு வருகின்றது.

**63.** கடந்த 2015-16 ஆம் ஆண்டுவரையில் ஒரு மாநிலத்திற்குள் திரட்டப்பட்ட நிகர சிறுசேமிப்பு வசூலானது, அந்த மாநிலத்திற்கே முழுவதுமாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ நீண்ட காலக் கடனாக மத்திய அரசால் வழங்கப்பட்டு வந்தது. எனினும், தேசிய சிறுசேமிப்பு நிதியத்தில் இருந்து கடன் பெறுவதற்கு மாநிலங்களை வற்புறுத்தக்கூடாது என்ற பதினான்காம் நிதிக்குழு பரிந்துரையின் அடிப்படையிலும் தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்றும் 2016-17 ஆம் ஆண்டு முதல் சிறுசேமிப்புக் கடன் பெறுவதிலிருந்து மாநிலத்திற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## சிறுசேமிப்புத் திட்டங்கள்

**64.** சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரின் தேவைகளுக்கு ஏற்றவகையில் பலவிதமான சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதத்தினை

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களின் முதல் நாளில் மாற்றியமைத்து மத்திய அரசு அறிவிப்பினை வெளியிடுகிறது.

**65.** இத்தகவல்கள் யாவும் தற்போது சிறுசேமிப்புத் துறையின் இணையதளமான www.tnsmallsavings.org - இல் தெரிவிக்கப்பட்டு அவ்வப்போது மாற்றங்களும் வெளியிடப்படுகின்றன. தற்போது 01.07.2019 முதல் நடைமுறையில் உள்ள சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதங்கள் பின்வருமாறு:-

| **வ. எண்.** | **திட்டம்** | **01.07.2019 முதல் வட்டி விகிதம் (%)** | **வட்டி கூட்டுதல் கால இடைவெளி** |
|---|---|---|---|
| 1 | அஞ்சலக சேமிப்புக் கணக்கு (POSA) | 4.0 | ஆண்டுக்கு ஒரு முறை |
| 2 | கால வைப்பீடு (POTD) | | |
| அ | 1 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி | 6.9 | காலாண்டுக்கு ஒரு முறை |
| ஆ | 2 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி | 6.9 | காலாண்டுக்கு ஒரு முறை |

| வ. எண். | திட்டம் | 01.07.2019 முதல் வட்டி விகிதம் (%) | வட்டி கூட்டுதல் கால இடைவெளி |
|---|---|---|---|
| இ | 3 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி | 6.9 | காலாண்டுக்கு ஒரு முறை |
| ஈ | 5 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி | 7.7 | காலாண்டுக்கு ஒரு முறை |
| 3 | அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் (PORD) (5 ஆண்டுகள்) | 7.2 | காலாண்டுக்கு ஒரு முறை |
| 4 | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (SCSS) (5 ஆண்டுகள்) | 8.6 | காலாண்டுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது |
| 5 | அஞ்சலக மாதாந்திர வருவாய் திட்டம் (POMIS) (5 ஆண்டுகள்) | 7.6 | மாதத்திற்கு ஒரு முறை வழங்கப்படுகிறது |
| 6 | தேசிய சேமிப்புப் பத்திரம் வெளியீடு (NSC VIII) (5 ஆண்டுகள்) | 7.9 | ஆண்டுக்கு ஒரு முறை |
| 7 | பொது வருங்கால வைப்பு நிதி / பொன் மகன் பொது வைப்பு நிதி (15 ஆண்டுகள்) | 7.9 | ஆண்டுக்கு ஒரு முறை |
| 8 | கிஸான் விகாஸ் பத்திரம் (KVP) | 7.6 (112 மாதங்களில் முதிர்வடையும்) | ஆண்டுக்கு ஒரு முறை |
| 9 | சுகன்யா சம்ரிதி கணக்கு (செல்வ மகள் சேமிப்புத் திட்டம்) | 8.4 | ஆண்டுக்கு ஒரு முறை |

## செல்வமகள் சேமிப்புத் திட்டம்

**66**. செல்வமகள் சேமிப்புத் திட்டம் என்ற பெண் குழந்தைகளுக்கான சேமிப்புத் திட்டத்தை மத்திய அரசு 03.12.2014 அன்று அறிமுகப்படுத்தியது. பத்து வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளுக்காக பிரத்யேகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ், அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஓர் ஆண்டிற்கு அதிகபட்சமாக 1.5 இலட்சம் ரூபாய் வரை வைப்பீடு செய்யலாம். இத்திட்டத்திற்கான தற்போதைய வட்டி விகிதம் 01.07.2019 முதல் 8.4 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## பொன்மகன் பொதுவைப்பு நிதி

**67.** செல்வமகள் சேமிப்புத் திட்டத்திற்கு கிடைத்த வரவேற்பையொட்டி, ஆண் குழந்தைகளும் பயன்பெறும் வகையில் “பொது வருங்கால வைப்பு நிதித் (PPF)” திட்டம், “பொன்மகன் பொதுவைப்பு நிதி” என பெயரிடப்பட்டு இந்திய அஞ்சல் துறை மூலம் 04.09.2015

முதல் மறுபடியும் துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், பத்து வயதிற்குட்பட்ட ஆண் குழந்தைகள், அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் மூலமும், பத்து வயதிற்கு மேற்பட்டவர்கள் தாங்களாகவும் வைப்பு நிதிக் கணக்கைத் துவக்கலாம். ஓர் ஆண்டிற்கு 1.5 இலட்சம் ரூபாய் வைப்பீடு செய்ய வாய்ப்புள்ள இத்திட்டத்திற்கு 01.07.2019 முதல் 7.9 சதவீத வட்டி விகிதம் வழங்கப்படுகிறது.

## மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம்

**68.** 01.07.2019 முதல் 5 ஆண்டுகள் மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டத்திற்கு 8.6 சதவீத வட்டி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 3 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி வழங்கப்படும் கணக்கினை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கும் வசதி உண்டு. கணக்கினை முன்கூட்டியே முடிக்கும்பொழுது ஓராண்டிற்கு பிறகு 1.5 சதவீதமும், 2 ஆண்டிற்கு பிறகு

1 சதவீதமும் முதலீட்டுத் தொகையில் பிடித்தம் செய்து வழங்கப்படும்.

## சிறுசேமிப்பு வசூல் விவரங்கள்

**69**. சிறுசேமிப்புத் திட்டங்களின் வாயிலாக 2013-14 முதல் 2018-19 வரையிலான நிதியாண்டுகளில் தமிழகத்தில் திரட்டப்பட்ட நிதி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

(ரூபாய் கோடியில்)

| வ. எண். | நிதியாண்டு | இலக்கு | மொத்தம் | திரும்ப பெறப்பட்ட தொகை | நிகரம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2013 - 14 | - - | 9,624.19 | 10,354.97 | -730.78* |
| 2 | 2014 - 15 | - - | 10,936.37 | 12,020.49 | -1,084.12* |
| 3 | 2015 - 16 | - - | 17,259.82 | 15,314.41 | 1,945.41 |
| 4 | 2016 - 17 | - - | 20,737.29 | 17,227.19 | 3,510.10 |
| 5 | 2017 - 18 | - - | 25,257.16 | 17,301.21 | 7,955.95 |
| 6 | 2018 - 19 | -- | 31,923.58 | 19,511.08 | 12412.50 |

(*2013-14 மற்றும் 2014-15-ஆம் ஆண்டுகளில் வசூலிக்கப்பட்ட தொகையைவிட கூடுதலான தொகை திரும்பப் பெறப்பட்டது)

## முகவரமைப்பு மற்றும் வெகுமதிகள்

## முகவரமைப்பு

**70**. சிறுசேமிப்புத் தொகையைத் திரட்டுவதற்காக மாநிலம் முழுவதும் முகவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவிப்பதிலும், வசூல் பணிகளிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். இதில் மகளிர் முகவர் (MPKBY) திட்டத்தின்கீழ் அஞ்சலகத் தொடர் வைப்புத் திட்டத்திற்கு (PORD) முன்னுரிமை அளித்து மகளிர் மட்டுமே சிறுசேமிப்பு முகவர்களாக நியமனம் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு முழுவதும் தற்பொழுது, அதாவது 31.03.2019 வரை மொத்தம் 17,152 பதிவு பெற்ற முகவர்கள் பணியாற்றி வருகின்றனர். அந்த விவரங்கள் பின்வருமாறு:-

| வ. எண. | முகவர்களின் வகை | மொத்த முகவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம் (SAS) | 3,530 |
| 2 | மகளிர் முகவர் திட்டம் (MPKBY) | 13,622 |
| **மொத்தம்** | | **17,152** |

## வெகுமதிகள்

**71**. ஒருசில சிறுசேமிப்புத் திட்டங்களின்கீழ் முகவர்கள் மூலமாகத் திரட்டப்படும் முதலீடுகளுக்கு மத்திய அரசு தரகுத் தொகை வழங்குகிறது. சிறுசேமிப்பு முகவர்களை ஊக்குவிப்பதற்கும் பொதுமக்களின் மனங்களில் சேமிக்கும் பண்பை வளர்ப்பதற்கும், சிறுசேமிப்பில் சிறந்து விளங்கும் மகளிர்(MPKBY) முகவர்களுக்கு ஊராட்சி ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவிலும் மற்றும் நிலை முகவர்களுக்கு (SAS) மாவட்டம் மற்றும் மாநில அளவிலும் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசு ரொக்கப் பரிசுகள் மற்றும்

கேடயங்களை வழங்கி வருகின்றது. கடந்த 2018-19 ஆம் ஆண்டிற்கு, 709 முகவர்களுக்கு 9,68,000/- ரூபாய் அளவில் ரொக்க பரிசுகளும் கேடயங்களும் வழங்கப்பட்டுள்ளன.

## உலக சிக்கன நாள்

**72**. சிறுசேமிப்புத் துறையால் உலக சிக்கன நாள் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 30-ஆம் நாள் அனுசரிக்கப்படுகிறது. தமிழ்நாடெங்கும் சிக்கனம் மற்றும் சிறுசேமிப்புத் திட்டங்களில் சேமித்தல் ஆகிய இரண்டு பழக்கங்களை ஊக்கப்படுத்துவதிலும் சிறுசேமிப்பு முதலீட்டாளர்கள் மற்றும் முகவர்களின் குறைகளைக் இணையதளம் (www.tnsmallsavings.org) மூலமாக களைவதிலும் இத்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் உலக சிக்கன நாள் விழாவின்போதும் பொதுமக்களிடையே சிறுசேமிப்புத் திட்டங்களை விளம்பரப்படுத்துவதில் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்களும், சென்னை பெருநகரில்

சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையாளரும், முக்கியப் பங்காற்றுகின்றனர். அதன்படி, மாணக்கர்களிடையே சிறுசேமிப்பு தொடர்பான கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, நடனப் போட்டி மற்றும் நாடகப் போட்டிகள் நடத்தப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட மாணாக்கர்களுக்கு சிறுசேமிப்புத் துறை மூலம் பரிசு அளிக்கப்படுகின்றது. மேலும், 2018-19 ஆம் ஆண்டில் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்புடன் மாநில அளவிலான விழா சென்னையில் நடத்தப்பட்டது.

## விளம்பரம்

**73.** சிறுசேமிப்புத் துறை, சென்னை மற்றும் மாவட்டங்களில் நடத்தப்படும் பொருட்காட்சிகளில் கலந்துகொண்டு சிறுசேமிப்பு அரங்கு அமைத்தும், பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரங்கள் வழங்கியும் விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றது. 2018-19 ஆம் ஆண்டில் பல்வேறு கிராமங்களில் 10.00 இலட்சம் ரூபாய் செலவில் 250 தெரு நாடகங்கள் நடத்தப்பட்டன.

## அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

**74.** நிதி தொடர்பான தகவல்களை மிகவும் பயனுள்ள வகையில் பகுப்பாய்வு செய்யவும், மாநிலத்தின் கணக்குகளை மின்னணுத் தகவல் தொகுப்பு உபகரணங்கள் மூலம் பகுப்பாய்வு செய்து சிறப்பான முறையில் வரவு செலவினைத் திட்டமிடும் நோக்குடன் 1971 ஆம் ஆண்டு மத்திய வரவு செலவுத் திட்ட விவரங்கள் தொகுப்பு மையம் ஒன்றை அரசு தோற்றுவித்தது. இந்த மின்னணு தகவல் தொகுப்பு வசதிகளைப் பயன்படுத்தி அரசுத் துறைகளின் பலதரப்பட்ட செயல்பாடுகளுக்குத் தேவையான வகையில் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் 1972 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நிர்வாக வசதிகளுக்காக 1975 ஆம் ஆண்டு மேற்கண்ட இரண்டு மையங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் ஏற்படுத்தப்பட்டது. தற்போது

இந்த மையம் கீழ்கண்ட திட்டங்களுக்காக தகவல் தொகுப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

1. பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்
2. உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்.
3. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி (GPF)
4. சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு அளிக்கும் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக ஊக்கத்தொகை வழங்குதல் (DBT)

## பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

**75.** அரசு ஆணை (நிலை) எண். 201, நிதி (ஓய்வூதியம்)த் துறை நாள்.21.05.2009 இன் படி,

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் / நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்கள் / நகராட்சிப் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்ட கணக்குகள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. அரசு ஆணை (நிலை) எண்.463 நிதி (ஓய்வூதிய குறை தீர்ப்பு) துறை, நாள் 27.12.2013 இன் படி, மாநிலக் கணக்காயரால் பராமரிக்கப்பட்டு வந்த அரசுப் பணியாளர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட கணக்குகள் இத்துறைக்கு 01.01.2014 அன்று மாற்றம் செய்யப்பட்டது.

**76**. அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் வழங்கியுள்ள பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் குறியீட்டு எண்கள் குறித்த விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பணியாளர் விவரம் | 31.03.2019 அன்று வரை வழங்கப்பட்ட குறியீட்டு எண்கள் |
|---|---|---|
| 1 | அரசுப் பணியாளர்கள் | 4,13,991 |
| 2 | நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் / ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி பள்ளி பணியாளர்கள் | 99,568 |
| 3 | உள்ளாட்சித் துறை பணியாளர்கள் | 28,718 |
| | மொத்தம் | 5,42,277 |

**77**. கடந்த 2017-2018 வரை 4,47,573 அரசுப் பணியாளர்கள் / நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் / ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கணக்குச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

## இறுதிக் கணக்குத்தாள் வழங்குதல்

**78.** அரசாணை (நிலை) எண்.59 நிதி (ஓய்வூதிய குறை தீர்ப்பு)த் துறை, நாள்.22.02.2016 இன்

படி, 31.03.2019 வரை 11,801 பணியாளர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் இறுதிக் கணக்குத் தாள் வழங்குவதற்கு கருவூலம் மற்றும் கணக்கு துறை பரிந்துரை செய்துள்ளது. அவற்றினைக் கூர்ந்தாய்வு செய்து ஒப்பளிப்பு வழங்க 10,959 பணியாளர்களுக்குரிய இறுதிக் கணக்குத் தாள்கள் கருவூலக் கணக்கு துறைக்கு அனுப்பப்பட்டன. அதன்படி, 484.92 கோடி ரூபாய் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

**79.** உள்ளாட்சி அமைப்புகளில் சுமார் 28,718 நிலையாக்கப்படாத பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும் இணையதளம் வழியாக, சந்தா பிடித்தம் மற்றும் அதற்கீடான உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு ஆகியவை பதிவு

செய்யப்பட்டு உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினரால் தணிக்கை செய்யப்பட்ட அனைத்து நிலையாக்கப்படாத பணியாளர்களுக்கும் 2017-2018 ஆம் ஆண்டு முடிய கணக்குத் தாள் வழங்கப்பட்டுள்ளது.

## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி திட்டம்

**80.** அரசாணை (நிலை) எண்.108, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 19.04.2010 இல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி குறித்த பணிகள், அரசு தகவல் தொகுப்பு விவர மையத்திற்கு ஒப்படைக்கப்பட்டன. மேற்கண்ட

திட்டத்தில் 31.03.2019 அன்றுள்ளபடி 2,02,494 சந்தாதாரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**81.** அரசாணை (நிலை) எண்.53, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள்.20.07.2015 இல் இந்தத் திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டப் பணியாளர்களிடமிருந்து ஆகஸ்ட் 2015 முதல் வருங்கால வைப்பு நிதி பிடித்தம் செய்யப்படுகிறது. மேலும் கருவூலம் / சம்பளக் கணக்கு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட வரவின பட்டியல்களின் அடிப்படையில் 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குத்தாள் தொகுக்கப்பட்டு வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. 2018-2019 ஆம்

ஆண்டிற்கான கணக்குத்தாள் தொகுக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## இறுதித் தொகை வழங்கும் பணிகள்

**82**. அரசு கடித எண்.5992, சமூக நலத்துறை - 4 - 2/2017, நாள்.12.04.2018 இல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மற்றும் காலமான பணியாளர்களுக்கான இறுதித் தொகை வழங்கிட உரிய படிவங்கள் அரசால் வெளியிடப்பட்டு, இறுதித் தொகை வழங்கும் அதிகாரம் ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ளது. 31.03.2019 வரை 1,340 பணியாளர்களுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு சரிபார்க்கப்பட்டு 711 இறுதி ஒப்பளிப்பு ஆணைகள் (Final Authorization Orders) வழங்கப்பட்டுள்ளன.

## 2018-2019 ஆம் ஆண்டில் பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட நிதி ஒதுக்கீடு

**83.** பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் 2018-2019 ஆம் ஆண்டில் அரசுப் பணியாளர்கள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் மற்றும் நகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகையான 2225.78 கோடி ரூபாயும் அதற்கு ஈடான அரசின் பங்களிப்புத் தொகையும், அவற்றிற்கான வட்டியும், பொதுக் கணக்கில் (Public Account) “8342” என்ற பெருந்தலைப்பின் கீழ் பேணப்படும் சம்பந்தப்பட்ட பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் கணக்குகளுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு அளிக்கும் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக ஊக்கத்தொகை வழங்குதல் (Direct Benefit Transfer)

**84**. அரசாணை எண். 191, வேளாண்மை (S1) துறை, நாள்.24.07.2018 இன் படி, கரும்பு

உற்பத்தியாளர்களுக்கு 2017-2018 ஆம் ஆண்டிற்கான, சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு அளிக்கும் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக ஊக்கத்தொகை வழங்குதலுக்கான (Direct Benefit Transfer) விவரக் குறிப்பு தொகுக்கும் பணி, அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. அதற்காக 15.00 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. தற்போது 2018-2019 ஆம் ஆண்டு கரும்பு அரவை பருவத்திற்கான விவரக் குறிப்பு தொகுக்கும் பணி (Database Preparation) மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறை

## தனிச் சட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட நிறுவனங்களின் தணிக்கை

**85.** அரசு வணிகத் திட்டங்கள் தணிக்கைத் துறை 1969 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, அரசாணை எண். 598, நிதி (உள்ளாட்சி நிதி)த் துறை, நாள்.03.08.1992 இன்படி நடைமுறையில் இருந்த உள்ளாட்சி நிதித்தணிக்கை மற்றும் அரசு வணிகத் திட்டங்கள் துறைகளின் பணிகள் திருத்தி அமைக்கப்பட்டு அரசுத் துறைகளிலும் உட்தணிக்கை மேற்கொள்ளும் வகையில் அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறையாக செயல்பட்டு வருகிறது. பின்வரும் வாரியங்கள் மற்றும் நிறுவனங்களின் தணிக்கை அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| தொடர். எண் | நிறுவனத்தின் பெயர் | தணிக்கை முடிக்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|
| (I) | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | 2016-17 |
| (II) | தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் | 2016-17 |
| (III) | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 2016-17 |
| (IV) | சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் | 2017-18 |
| (V) | தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் (சட்டபூர்வமானது) | 2017-18 |
| (VI) | தமிழ்நாடு வக்ஃபு வாரியம் | 2014-15 |

மேற்கண்ட சட்டப்பூர்வ வாரியங்களின் ஆண்டுத் தணிக்கை (வ.எண். V & VI நீங்கலாக) உடனிகழ் தணிக்கையாக மேற்கொள்ளப்பட்டு, அத்தணிக்கை அறிக்கைகள், நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள்

வெளியிடப்படுவதுடன் அவற்றிலுள்ள பல்வேறு கடுங்குறைபாடுகள் குறித்த விவரங்கள் அரசுக்கும் தமிழ்நாடு சட்டசபையின் பொது நிறுவனங்கள் குழுவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படுகின்றன.

## தனிச் சட்டங்களின் கீழ் உருவாக்கப்படாத நிறுவனங்களின் தணிக்கை

**86.** கீழ்க்கண்ட தனிச் சட்டங்களின் கீழ் உருவாக்கப்படாத நிறுவனங்களின் தணிக்கை இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| தொடர். எண் | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை / நிறுவனங்கள் |
|---|---|---|
| (i) | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 96205 |
| (ii) | வேளாண்மை விரிவாக்க மையங்கள் | 881 |
| (iii) | எடையளவு நிறுவனங்கள் | 333 |

| தொடர். எண் | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை / நிறுவனங்கள் |
|---|---|---|
| (iv) | அரசால் ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்கள் (Govt Institutions receiving Grants-in-Aid) | 1096 |
| (v) | அரசிடமிருந்து உதவி பெறும் பிற நிறுவனங்கள் (Non-Govt Institutions receiving Grants-in-Aid) | 733 |

இத்துடன் கீழ்க்கண்ட திட்டங்கள் / நிறுவனங்களுக்கான தணிக்கைகள் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

1. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்
2. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்
3. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு (சமூக பாதுகாப்பு) திட்டம்
4. நாட்டுப்புற கலைஞர் நல வாரியம்

5. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம்

6. 15 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்கள்

7. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி உதவித்தொகைத் திட்டம்

8. அண்ணா மேலாண்மை நிறுவனம்

9. மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகங்கள்

10. இதர நிறுவனங்கள்

## தணிக்கைச் சான்று

**87.** மானியம் பெறும் நிறுவனங்களுக்கு மானியத் தகுதிச் சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தணிக்கைக்கு உட்பட்ட வாரியங்களில் பணியாற்றும் பணியாளர்களின் ஓய்வூதியக் கருத்துருக்கள் மற்றும் வருங்கால வைப்பு நிதிக் கணக்கு முடிப்புகளுக்கு தணிக்கைச் சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது.

## இதர பணிகள்

**88**. அரசின் குறிப்பான ஆணையின்படி தற்போது 19 அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணிகள் இத்துறையின் உதவி இயக்குநர்கள் / ஆய்வர்கள் நிலையில் உள்ள அலுவலர்களால் மேற்பார்வையிடப்படுகின்றன.

மேலும், கீழ்க்காணும் நிறுவனங்கள் / திட்டங்கள் / நிதிகளின் கணக்குகள் மீதான தணிக்கைப் பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகிறது:

1. நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களில் நாட்டு நலப்பணித் திட்டம்
2. தமிழ்நாடு அரசு மருத்துவ நல நிதித் திட்டம்
3. குடும்பப் பாதுகாப்பு நிதி
4. மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதி
5. அரசு உதவிபெறும் பல்தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியற் கல்லூரிகள்

6. அனைத்து அரசுத்துறை பணியாளர்களின் ஊதிய நிர்ணயத் தணிக்கை (வணிக வரித்துறை, பதிவுத்துறை, போக்குவரத்துத் துறை ஆகிய துறைகளில் இத்தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது)

7. சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தேர்தல் செலவின தணிக்கை

## தணிக்கை அறிக்கை மீதான தொடர் நடவடிக்கை

**89.** தணிக்கையின் போது காணப்படும் கடுங்குறைபாடுகள் கொண்ட பத்திகளின் சுருக்கம் அவ்வப்போது நடவடிக்கைக்காக அந்தந்த துறைத் தலைமைக்கும் மற்றும் அரசின் துறை செயலாளரின் கவனத்திற்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

## தணிக்கைக் கட்டணம்

**90.** உண்மைச் செலவினம் அல்லது சராசரி செலவுகளின் அடிப்படையில் தணிக்கை

கட்டணத்திற்கான கேட்பு எழுப்பப்படுகிறது. சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் தணிக்கைக் கட்டணம் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது.

## தணிக்கை நடைமுறை நூல்

**91.** அரசுத்துறை நிறுவனத் தணிக்கை துறைக்கான நடைமுறை நூலின் தொகுதி III A (மற்றும்) III B க்கான மே 2019 முதல் பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

**ஓ. பன்னீர்செல்வம்**
**துணை முதலமைச்சர்**